# இலங்கை பரீட்சைத் திணைக்களம்
# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2019 ஒகஸ்ட்
# புதிய, பழைய பாடத்திட்டங்கள்

இம்முறை பரீட்சையானது புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் என இரு பரீட்சைகளாக நடைபெறும். விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தும்போது தான் தோற்றும் பாடத்திட்டம் எதுவெனச் சரியாக இனங்கண்டு, அதற்கேற்ப விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்த வேண்டும்.

மேற்படி பரீட்சைக்குத் தனிப்பட்ட முறையில் தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் 2019 பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 01 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலை முழுமையாக நன்கு வாசித்து விளங்கிக் கொண்டு தமது விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்த வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் **நகர எண்ணையும் பாட எண்களையும்** குறிப்பிடும்போது சரியான எண்களைக் குறிப்பிடுவதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். ஆகக் கூடுதலாக பிரதான பாடங்கள் 03க்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு இடமளிக்கப்படும்.

02. **விண்ணப்பப்படிவம்**

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தையே பயன்படுத்த வேண்டும்.

**பாடசாலையில் இருந்து பாடசாலை விடுகைப்பத்திரத்தைப் பெற்றவர்கள் மட்டுமே தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக தோற்ற முடியும். பாடசாலையில் கற்றுக்கொண்டு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தோற்றினார் என அறியப்படுமிடத்து பரீட்சைப் பெறுபேற்றை இரத்து செய்து எதிர்வரும் காலங்களில் பரீட்சைகளுக்குத் தோற்றத் தடை விதிக்கப்படும்.**

2.1(அ) **(13) பொது ஆங்கிலம்**

மூன்று பிரதான பாடங்களுடன் பொதுச் சாதாரண பரீட்சைக்கும் மேலதிகமாகப் பொது ஆங்கில பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும். **இப்பாட பெறுபேறு பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு பயன்படுத்தப்படமாட்டாது.** இப்பாடத்திற்காகப் பெறும் தரம் க.பொ.த.(உயர்.தர) பரீட்சைப் பெறுபேற்று சான்றிதழில் குறிப்பிடப்படும்.

இப் பாடத்தை ஒரு பாடமாக மட்டும் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும்.

(ஆ) **(12) பொதுச் சாதாரண பரீட்சை**

எவராயினும் ஒரு விண்ணப்பதாரி இலங்கையின் பல்கலைக்கழகமொன்றிற்கு அனுமதி பெறும் எண்ணத்துடன் இருப்பாராயின் அவர் இப்பாடத்தில் கட்டாயமாகச் சித்தியடைய வேண்டும்.

(இ) பாட இலக்கம் 28, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 65, 66 ஆகிய பாடங்களுக்கு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் செய்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இவ்விரு வகைப் பரீட்சைகளுக்கும் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம் இப்பாடங்களுக்கான பரீட்சை பெறுபேறுகள் வழங்கப்படும்.

2.2 விண்ணப்பதாரிகள் இவ்வறிவுறுத்தலில் காட்டப்பட்டுள்ள DP/AL/2019/5 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 28 செ.மீ X 21 செ.மீ அளவிலான வெள்ளைத்தாளில் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்க வேண்டும். 01 முதல் 12 வரையான விவரங்கள் தாளின் முதல் பக்கத்திலும் 13 முதல் 15 வரையான விவரங்கள் அதே தாளின் மறு பக்கத்திலும் அமையுமாறு ஒரு தாளிலேயே காட்டப்பட வேண்டும். **விண்ணப்பப்படிவம் 2019.03.01ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், த.பெ 1503, கொழும்பு** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவங்களும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

2.3 இறுதித் திகதிக்கு முன் பற்றுச்சீட்டைப் பெற்றிருப்பினும் இறுதித் தினத்திற்கு பின் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கிறேன்.

2.4 **ஒரு விண்ணப்பதாரிக்காக ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே அனுப்ப வேண்டும். ஒன்றுக்குமேற்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அனுப்பினால் சகல விண்ணப்பப்படிவங்களும் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் அப்பரீட்சார்த்தி தொடர்பாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகளை வழங்கிய பின்னராயினும் இப்படியான முறைகேடான செயல் தெரியவரின் பெறுபேற்றை இரத்துச் செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.**

03. ஒரு உறையினுள் ஒரு விண்ணப்பப்படிவத்தை மட்டும் இட்டு அனுப்ப வேண்டும். **அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை 2019 - ஓகஸ்ட் - நகர எண் ........... மற்றும் நகரம் ..........."** எனக் குறிப்பிடப்பட வேண்டும். இக்கோடுகளில் தெரிவு செய்த நகர எண்ணையும் நகரத்தையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். ஏதேனும் நகரமொன்றில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்கு போதிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இல்லையெனின், அண்மையிலுள்ள நகரத்தில் தோற்றுவதற்கு ஒழுங்கு செய்யப்படும்.

04. வேறு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட அச்சிடப்பட்டுள்ள படிவங்களை இதற்காகப் பயன்படுத்துவதாயின் இவ் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள பாட எண்கள், நகர எண்களுடன் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள ஏனைய சகல விபரங்களும் ஒத்ததாக இருத்தல் அவசியம். அத்துடன் பிற நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் உள்ள பாட எண்கள், நகர எண்கள் என்பவற்றிலுள்ள தவறான தகவல்களுக்கான பொறுப்பை இத்திணைக்களம் ஏற்காது என்பதுடன் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வமான இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப இங்கு தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு பரீட்சைக்கு விண்ணப்பிப்பது விண்ணப்பதாரியின் கடமையாகும்.

05. இப் பரீட்சை ஒழுங்கமைப்பைச் செய்யும் பொருட்டு கணனி இயந்திரங்களை உபயோகப்படுத்துவதால் நீங்கள் தெரிவு செய்யும் பாடங்களின் பாட **எண்களும்** தெரிவு செய்யும் **நகரமும்** நகர **எண்ணும்** மிக முக்கியமானது. ஆதலால் **விண்ணப்பப்படிவத்தை தபாலில் சேர்ப்பதற்கு முன்னர் மிகவும் கவனமாக மீண்டும் ஒரு முறை வாசித்து அவற்றில் எழுதப்பட்டுள்ள பாட எண்களையும் நகர எண்ணையும் மற்றும் விவரங்களையும் சரி பார்ப்பதுடன், இன்னொருவரைக் கொண்டு பரீட்சித்துப் பார்த்தல் மிக முக்கியமானதாகும்.**

**எக்காரணத்துக்காகவேனும் பரீட்சை நிலையமோ, விண்ணப்பித்த பாடமோ, மொழி மூலமோ பின்னர் மாற்றப்படமாட்டாது என்பதால் உமது விண்ணப்பப்படிவத்தை எப்பிழையுமின்றி பூரணப்படுத்த வேண்டும்.**

06 உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்கள் தொடர்பாக ஏதாவது அறிந்து கொள்ள வேண்டுமாயின் உங்களின் அனுமதி அட்டை கிடைத்தவுடனே அவ் அனுமதி அட்டையை எடுத்துக் கொண்டு பரீட்சைத்திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு சமூகமளித்தல் வேண்டும்.

07. **தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது நிரந்தர வதிவிட முகவரியை குறிப்பிட வேண்டுமென்பதுடன் தாம் கல்விகற்ற தனியார், சர்வதேச பாடசாலைகளின் பெயர், முகவரியை எழுதலாகாது. அவர்கள் தமது தனிப்பட்ட தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.**

08. செய்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டையில் குறிப்பிட்ட திகதியில் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். உரிய தினத்தில் தோற்றத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு அப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு வேறு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

09. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சார்த்திகள் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் தோற்றும் போதும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டை அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தை கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவங்களை அனுப்பியவுடன், தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரிகள் இதற்குரிய விண்ணப்பப்படிவத்தை கிராம அலுவலர் ஊடாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்து தமது தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

10. இப் பரீட்சை தொடர்பாக அரச பாடசாலைகளிலிருந்தும்/ கட்டணம் அறவிடும் / அறவிடாத அரச அனுமதி பெற்ற தனிப்பட்ட பாடசாலைகளிலிருந்தும் / அனுமதி வழங்கப்பட்ட பிரிவெனாக்களிலிருந்தும் முதலாவது, இரண்டாவது முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரர்கள் தவிர்ந்த ஏனைய அனைவரும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தல் வேண்டும். அவ்வாறு கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படும்.

11. இப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கவுள்ள **விசேட தேவையுடைய விண்ணப்பதாரிகள்** இருப்பின், இப்பத்திரிகையிலுள்ள '**விசேட தேவையுடைய மாணவர்களுக்காக சலுகைகள் வழங்கல்**' என்ற தலைப்பின் கீழுள்ள அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு விண்ணப்பப்படிவத்தை அதிலுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய தயாரித்து அனுப்ப வேண்டும்.

**குறிப்பு:** செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் முழுமையாகவோ, பகுதியாகவோ மீளளிக்கப்படமாட்டாதென்பதுடன் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவும் மாட்டாது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்து எந்த ஒரு வினாப்பத்திரத்திற்கும் அல்லது ஒரு வினாப்பத்திரத்தின் ஒரு பகுதிக்கும் தோற்றாத பரீட்சார்த்திகள் மட்டும், பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகளாகக் கருதப்படுவார்கள். அத்தகைய பரீட்சார்த்திகளின் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பரீட்சை எத்தனம் (Attempt) செல்லுபடியற்றதாகிவிடாது. அப்பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றாமையை உறுதிப்படுத்துவதற்கு வைத்திய அத்தாட்சிப் பத்திரம் தேவைப்படமாட்டாது. இவர்கள் தமது அனுமதி அட்டையைப் பாதுகாப்பாக வைத்திருப்பதே எந்த ஒரு பாடத்திற்கும் பரீட்சார்த்தி தோற்றவில்லை என்பதனை நிரூபிப்பதற்கான ஒரே ஆதாரமாகும்.

**இப்பரீட்சை மூலம் புதிய மற்றும் பழைய பாடத்திட்டங்களுக்கேற்ப மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யும் முறை தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பின்னர் அறிவிக்கப்படும்.**

மேற்படி விடயம் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் : 011 - 2784208 / 0112784537

தொலைநகல் இலக்கம் : 011 - 2784422

பி.சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்

தொடர்பு எண் : 6/3/AL/2019
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
த.பெ.1503, கொழும்பு.
2019.02.11

DP/AL/2019/5

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ.தர)ப் பரீட்சை - 2019 ஓகஸ்ட்
# தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்பப்படிவம்

(இவ்விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன் இத்துடனுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்க வேண்டும். பின்னர் சொந்தக் கையெழுத்தில் படிவத்தைப் பூரணப்படுத்துக.)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

01. பரீட்சைக்கு தோற்ற தெரிவுசெய்த பாடத்திட்டம் :
**(புதிய பாடத்திட்டமா? பழைய பாடத்திட்டமா?)**

02. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தெரிவு செய்த மாவட்டம் :
தெரிவு செய்த நகரம் :
நகர எண்

03. முழுப்பெயர் : **(பிறப்புச்சான்றிதழிலுள்ளவாறு முழுப்பெயரைக் குறிப்பிடவும்)**
(i) ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில் : ..............................................................................
..............................................................................
(ii) சிங்களத்தில் / தமிழில் : ..............................................................................
..............................................................................

04. நிரந்தர வதிவிட முகவரியும் தொலைபேசி இலக்கமும் : தொ. இல :
(i) ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்
..............................................................................
..............................................................................
..............................................................................
(ii) சிங்களத்தில் / தமிழில்
..............................................................................
..............................................................................
..............................................................................

05. (i) பிறந்த திகதி : ஆண்டு மாதம் திகதி
(ii) 2019.01.01 ஆம் திகதியில் வயது : வருடம் மாதம் நாள்

06. மொழி மூலம் : சிங்களம் 2 தமிழ் 3 ஆங்கிலம் 4

07. 2019 ஆம் ஆண்டில் பரீட்சைக்கு தோற்றும் பாடங்கள், மொழிமூலம், பாட எண்கள் : (நன்கு சரிபார்த்து சரியாகக் குறிப்பிடவும்) இரண்டு மொழிமூலங்களில் தோற்றுவதாயின் மட்டும் ஒவ்வொரு மொழிமூலத்தையும் உரிய கூட்டினுள்ளும் குறிப்பிடுக. அன்றேல் அக்கூடுகளை வெறுமையாக விடவும்.

| பாடம் | மொழி | பாட எண் |
|---|---|---|
| i. .................................................. | | |
| ii. .................................................. | | |
| iii. .................................................. | | |
| iv பொதுச் சாதாரண பரீட்சை | | |
| v. பொது ஆங்கிலம் | | |

(iv,v இல் காட்டப்படும் பாடங்களுக்குத் தோற்றுவதாயின் மட்டும் கூட்டினுள் பாட எண்களை எழுதுக.)

08. விண்ணப்பிக்கும் பாடங்களின் எண்ணிக்கை :
**(இலக்கத்தில்)**

09. தேசிய அடையாள அட்டை :
**(தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றை மறுபக்கத்திலுள்ள உரிய கூட்டில் ஒட்டவும்.)**

10. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் ரூபா : ..................................................................
**(எழுத்தில்)** **(இலக்கத்தில்)**

11. ஆண் / பெண் : ஆண் 0 பெண் 1

12. தோற்றுகின்ற தடவை :
**(இலக்கத்தில்)**

T/THADSI/AL/20159AL/PAPER NOTICE.indd

13. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :

இவ் விண்ணப்பதாரி எனது கிராமசேவகர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தில் உள்ளவரென்றும் மேலே 03,04,09 ஆம் கூடுகளில் தரப்பட்டுள்ள விவரங்கள் உரிய ஆவணங்களின்படி சரியானவையென்றும் இவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன். இவரது ஆட்பதிவுத்திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டையையும் / செல்லுபடியாகும் கடவுச் சீட்டையும் / செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தையும் அதன் நிழற்பிரதியையும் பரிசீலித்தேன். எனது அலுவலகத்திலுள்ள ஆவணங்களின்படி இவை சரியாக உள்ளன. அந் நிழற்பிரதி விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் ஒட்டப்பட்டுள்ளது.

..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

...........................................
கிராம அலுவலரின் கையொப்பம்
பெயர் : ..........................................................................
(பதவி முத்திரை)

கிராம அலுவலரின் பிரிவும் அதன் இலக்கமும் .............
முகவரி : .......................................................................
.......................................................................

திகதி : ....................

14. ............................... திகதியுடைய பற்றுச்சீட்டு ................................என்னும் இலக்கத்தின் கீழ் ............... ........................................... அஞ்சல் / உபஅஞ்சல் அலுவலகத்தில் ரூபா ........................................... (எழுத்தில்)
[ ] செலுத்தப்பட்டது என உறுதிப்படுத்துகிறேன்.
(இலக்கத்தில்)

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கட்டணம் ரூபா | 150/- | 200/- | 250/- | 350/- | 400/- |

அஞ்சல் அலுவலகத்தில் பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இவ்விடத்தில் நன்றாக ஒட்டவும். அதன் நிழற்பிரதியை உங்களுடன் வைத்துக் கொள்ளுதல் கட்டாயமானது. (ஆகக்குறைந்தது பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் எண்ணையும் திகதியையும் பத்திரமாக வைத்திருத்தல் வேண்டும்.) **பற்றுச்சீட்டின் மூலப்பிரதி ஒட்டி அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

15. பரீட்சார்த்தியின் உறுதிக்கூற்று

................................................................................................................................ எனும் முகவரியில் வசிக்கும்..................(பெயர்)..................................................................................... ஆகிய நான் இவ் விண்ணப்பப் படிவத்தில் கூறப்பட்டுள்ள (1) சகல விவரங்களும் தகவல்களும் உண்மையானதென்றும் சரியானதென்றும் (2) இப் பரீட்சை தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட பிரமாணங்களுக்கும், பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகளுக்கும் இணங்குகின்றேன் எனவும் (3) நான் வேறு விண்ணப்பங்களை அனுப்பவில்லை என்றும் (4) இப்பரீட்சைக்குரிய கட்டணத்தை செலுத்தி அதன் பற்றுச்சீட்டை இப்படிவத்துடன் இணைத்துள்ளேன் என்றும் (5) இப் பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு அமைந்து நடக்கவும், கட்டுப்படவும் ஒத்துக் கொள்கின்றேன் என்றும் உறுதி அளிக்கின்றேன்.

..................
திகதி

................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

தேசிய அடையாள அட்டையின் / செல்லுபடியாகும் கடவுச் சீட்டின் / செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தின் நிழற்பிரதியை இங்கே ஒட்டவும்.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2019 ஓகஸ்ட்
## விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்துவதற்குரிய விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்

இல 01 : பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் பாடத்திட்டம் **புதியதா, பழையதா** எனத் தெளிவாகக் குறிப்பிடுக. பின்னர் பாடத்திட்டம் மாற்றம் செய்யப்படமாட்டாது. ஒரு பரீட்சார்த்தி முழு பரீட்சையையும் ஒரே பாடத்திட்டத்தின் கீழ் தோற்ற வேண்டும். அவ்வாறின்றி ஒருவர் சில பாடங்களை ஒரு பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் ஏனைய பாடங்களை மற்றைய பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் தோற்றியிருப்பின் அவரது முழு பெறுபேறுகளும் இரத்துச் செய்யப்படும்.

இல 02 : தெரிவு செய்யும் மாவட்டம், நகரம், நகர எண் :

நீங்கள் பரீட்சைக்கு தெரிவுசெய்த மாவட்டத்தைக் குறிப்பிடவும். இப் பரீட்சை நடைபெறும் நகர எண்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் அதுபற்றி விசேட கவனம் செலுத்த வேண்டும். நீங்கள் பரீட்சைக்குத் தோற்ற எண்ணியுள்ள நகரத்தையும் உரிய நகர எண்ணையும் தெரிவு செய்து குறித்த அடைப்பினுள் குறிப்பிட வேண்டும். உங்களால் **பிழையான நகரஎண் குறிப்பிடப்பட்டிருப்பின் மிகத்தூரத்திலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அனுமதிக்கப்படும் வாய்ப்பு உண்டு**. நகரங்களும், நகர எண்களும் உள்ளடங்கிய பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இல 03 : i. **பிறப்புச்சான்றிதழிலுள்ளவாறு** முழுப்பெயரை ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் எழுதுதல் வேண்டும். **முதலெழுத்துக்களுடன் பெயரை எழுத வேண்டாம்.**
உதாரணம் : JEYARASA JEYANTHINI

ii. **பிறப்புச்சான்றிதழிலுள்ளவாறு முழுப்பெயரை தமிழில் இங்கு குறிப்பிடவும்.**
**உதாரணம் : ஜெயராசா ஜெயந்தினி**

இல 04 : முகவரி (i) இல் ஆங்கிலத்திலும், (ii) இல் தமிழிலும் எழுதுக.

இங்கு நிரந்தர முகவரியைக் குறிப்பிடவும். எக்காரணம் கொண்டும் தற்கால வதிவிட முகவரியையோ, தனியார், சர்வதேச பாடசாலையின் முகவரிகளையோ குறிப்பிட வேண்டாம். உமது செல்லிட, வதிவிட தொலைபேசி இலக்கத்தினை அதற்குரிய கூட்டினுள் எழுதுக.

இல 05 : பிறப்புச் சான்றிதழின்படி பிறந்த திகதியை எழுதவும்.

இல 06 : மொழி மூலம் : தோற்றுவதற்கான மொழிமூலம் தொடர்பாக உரிய கூட்டில் புள்ளடி (X) இடவும்.

உ-ம் :-

| 2 | 3 (X) | 4 |
|---|---|---|
| (சிங்களம்) | (தமிழ்) | (ஆங்கிலம்) |

இல 07 : 2019 ஆம் ஆண்டு பரீட்சைக்கு அங்கீகரிக்கப்பட்ட பாடங்களும் ஊடகமொழியும்

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2016/13 இலக்கமும் 2016/4/26 ஆம் திகதியுடைய சுற்றுநிருபத்திற்கமைவாக பாடங்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். அச் சுற்றுநிருபத்திலுள்ள பாடத்துறைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடத்துறைகளுடன் இணைந்தொழுகாத ஏனைய பாடச்சேர்மானங்களைத் தெரிவுசெய்யும் பட்சத்தில், விண்ணப்பதாரிகள் "குறித்த பாடத்துறை ஒன்றில் அடங்காத" என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுகையில் "நாடளாவிய தரம் (Island Rank) மற்றும் "மாவட்ட தரம்" (District Rank) வெளியிடப்பட மாட்டாது. அச்சுற்றுநிருபத்துக்கு இணைந்தொழுகாத பாடச்சேர்மானங்களைத் தெரிவு செய்வதால் பரீட்சார்த்திகளுக்கு முகங்கொடுக்க வேண்டிவரும் பிரச்சினைகள் தொடர்பான பொறுப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். இப்பரீட்சார்த்திகள் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பாடப்பட்டியலிலிருந்து தமது பாடங்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும். இப்பரீட்சைக்கு மூன்று பிரதான பாடங்களைத் தெரிவுசெய்யவேண்டியதோடு பல்கலைக்கழகமொன்றில் அனுமதி பெறும் எண்ணமிருப்பின் பொது சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெறுதல் வேண்டும். மேற்படி பாடங்களுக்கு மேலதிகமாக பாட எண் 13 பொது ஆங்கில பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும்.

**முக்கியம்: ஒவ்வொரு பாடத்திற்கும் தோற்றுகின்ற மொழி மூலத்தைக் குறிப்பிடும்போது சிங்களம் எனின் 2 என்றும், தமிழ் எனின் 3 என்றும் ஆங்கிலம் எனின் 4 என்றும் உரிய கூட்டினுள் குறிப்பிடுக.**

உதாரணம்:

| பாடம் | மொழிமூலம் | பாடஎண் |
|---|---|---|
| பௌதிகவியல் | 3 | 01 |
| இரசாயனவியல் | 3 | 02 |
| உயிரியல் | 4 | 09 |
| பொதுச் சாதாரண பரீட்சை | 3 | 12 |
| பொது ஆங்கிலம் | | 13 |

பரீட்சார்த்திகள் ஆகக்கூடியது 05 பாடங்களுக்குத் தோற்ற முடியும்.

மிகமுக்கியம் :

i. பௌதிக விஞ்ஞான பாடத்துறையின் கீழ் 07 - கணித பாடத்தைத் தெரிவுசெய்ய முடியாது.

ii. பாட இல 14, 15, 16, 17, 18, 19 ஆகிய பாடங்களுள் **ஒன்றிற்கு** மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

iii. (65) பொறியியற் தொழில்நுட்பவியல் மற்றும் (66) உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் ஆகிய இரண்டு பாடங்களிலும் **ஒரு** பாடத்திற்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

iv. பொறியியற் தொழில்நுட்பவியல் பாடத்திற்கோ உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடத்திற்கோ விண்ணப்பிப்பவர்கள் மாத்திரம் (67) தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் பாடத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

v. சமயம் மற்றும் நாகரிகம் ஆகிய பாடங்களில் ஏதாவதொரு சமயத்தினை பரீட்சார்த்தி தெரிவு செய்வாராயின் அதனோடு தொடர்புபட்ட நாகரிகப் பாடத்தினை அவர் தெரிவு செய்ய முடியாது. அதே போன்று நாகரிகப்பாடத்தினை தெரிவு செய்வாராயின் அதனுடன் தொடர்புடைய சமய பாடத்தை தெரிவு செய்ய முடியாது.

vi. நடனம் - பாட இல 52 இற்கு விண்ணப்பிக்கும்போது நீங்கள் கற்ற நடன வகையைக் குறிப்பிடவும். உ - ம் நீங்கள் கற்றது கண்டி நடனம் என்றால் 52A எனவும், தாழ்நாட்டு நடனம் என்றால் 52B எனவும், சப்ரகமுவ நடனம் என்றால் 52C எனவும் குறிப்பிடவும். **இவ்வாறு வகைப்படுத்துவது செய்முறைப் பரீட்சைக்கு மாத்திரம் ஆகும். அனுமதி அட்டையிலும் பெறுபேற்று அட்டவணையிலும் 52 நாட்டியம் (தேசிய) என குறிப்பிடப்படும்.**

**vii. 54 - கீழைத்தேய சங்கீதம் பாடம் சிங்கள மொழி மூலத்தில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.**

viii. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை பின்னர் மாற்றம் செய்வதற்கோ அல்லது பரீட்சை மண்டபத்தில் பாட மாற்றங்கள் செய்வதற்கோ அல்லது மேலதிக பாடங்களுக்குத் தோற்றுவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது. அவ்வாறு தோற்றியிருப்பின் அப்பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இரத்துச்செய்யப்பட வேண்டி நேரிடும்.

**பாடப்பட்டியல்**

| | பாடம் | பாட எண் | பாடம் | பாட எண் |
|---|---|---|---|---|
| | பௌதிகவியல் | 01 | பௌத்த நாகரிகம் | 45 |
| | இரசாயனவியல் | 02 | இந்து நாகரிகம் | 46 |
| | கணிதம் | 07 | இஸ்லாமிய நாகரிகம் | 47 |
| | விவசாய விஞ்ஞானம் | 08 | கிரேக்க உரோம நாகரிகம் | 48 |
| | உயிரியல் | 09 | கிறிஸ்தவ நாகரிகம் | 49 |
| | இணைந்த கணிதம் | 10 | சித்திரக்கலை | 51 |
| | உயர் கணிதம் | 11 | நாட்டியம் (தேசிய - கண்டி) | 52A |
| * | பொதுச் சாதாரண பரீட்சை | 12 | நாட்டியம (தேசிய - தாழ்நாட்டு) | 52B |
| * | பொது ஆங்கிலம் | 13 | நாட்டியம் (தேசிய - சப்ரகமுவ) | 52C |
| | குடிசார்த் தொழில்நுட்பவியல் | 14 | நாட்டியம் (பரதம்) | 53 |
| | பொறிமுறைத் தொழில்நுட்பவியல் | 15 | சங்கீதம் (கீழைத்தேயம்) | 54 |
| | மின், இலத்திரன், தகவல் தொழில்நுட்பவியல் | 16 | சங்கீதம் (கர்நாடகம்) | 55 |
| | உணவுத் தொழில்நுட்பவியல் | 17 | சங்கீதம் (மேலைத்தேயம்) | 56 |
| | விவசாயத் தொழில்நுட்பவியல் | 18 | நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) | 57 |
| | உயிர் வளத் தொழில்நுட்பவியல் | 19 | நாடகமும் அரங்கியலும் (தமிழ்) | 58 |
| | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | 20 | நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) | 59 |
| | பொருளியல் | 21 | பொறியியற் தொழில்நுட்பவியல் | 65 |
| | புவியியல் | 22 | உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் | 66 |
| | அரசியல் விஞ்ஞானம் | 23 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | 67 |
| | அளவையியலும் விஞ்ஞான முறையும் | 24 | சிங்களம் | 71 |
| | இந்திய வரலாறு | 25A | தமிழ் | 72 |
| | ஐரோப்பிய வரலாறு | 25B | ஆங்கிலம் | 73 |
| | நவீன உலக வரலாறு | 25C | பாளி | 74 |
| | மனைப்பொருளியல் | 28 | சமஸ்கிருதம் | 75 |
| | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் | 29 | அரபு | 78 |
| | வணிகப் புள்ளிவிபரவியல் | 31 | மலாய் | 79 |
| | வணிகக் கல்வி | 32 | பிரெஞ்சு | 81 |
| | கணக்கீடு | 33 | ஜேர்மன் | 82 |
| | பௌத்தம் | 41 | ருசியன் | 83 |
| | இந்து சமயம் | 42 | ஹிந்தி | 84 |
| | கிறிஸ்தவம் | 43 | சீன மொழி | 86 |
| | இஸ்லாம் | 44 | ஜப்பானிய மொழி | 87 |

* பிரதான பாடங்களுக்கு உரித்துடையது அல்ல. தோற்றுவதாயின் மாத்திரம் பாட இலக்கத்தை கூட்டில் எழுதவும்.

இல.08 : விண்ணப்பிக்கும் பாடங்களின் எண்ணிக்கையைத் தெளிவாக இலக்கத்தில் எழுதவும்.

இல.09 : தேசிய அடையாள அட்டையின் / செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் / செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தின் எண்ணை எழுதி அதன் நிழற் பிரதியை உரிய கூட்டில் ஒட்டவும். அவ்வாறு தேசிய அடையாள அட்டையின் / செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் / செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தின் நிழற் பிரதி ஒட்டப்படாத விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதை கூடிய கவனத்திற் கொள்ளவும்.

இல.10 : செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் சொற்களிலும் இலக்கத்திலும் எழுதுக.

இல.11 : பால் : ஆண் / பெண் என்று குறிப்பிடுவதற்குரிய கூட்டில் "X" புள்ளடி இடவும்.

இல.12 : நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது எத்தனையாவது தடவை என்பதைக் குறிப்பிடவும்.

இல.13 : **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்:**

தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பப்படிவத்தில் இருக்கும் கையொப்பத்தை அவர்களது வதிவிடம் அமைந்துள்ள கிராமத்திற்குரிய கிராம அலுவலரால் மாத்திரமே அத்தாட்சிப்படுத்த வேண்டும். அதற்காக தேசிய அடையாள அட்டையையும் / செல்லுபடியாகும் கடவுச்சீட்டையும் / சாரதி அனுமதிப் பத்திரத்தையும் அதன் நிழற்பிரதியையும் கொண்டு செல்லல் வேண்டும்.

இல.14 : **செலுத்தப்பட்ட கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் **முத்திரை** அல்லது **காசுக்கட்டளை** மூலம் செலுத்தப்படலாகாது. பரீட்சைக் கட்டணத்திற்கான பணத்தை அருகிலுள்ள அஞ்சல் / உப அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தி அதற்காகப் பெறப்பட்ட பற்றுச்சீட்டை 14 ஆவது கூட்டில் ஒட்ட வேண்டும். 2019 பெப்ரவரி 13 ஆம் திகதியிலிருந்து மார்ச் 01ஆம் திகதி வரை மட்டும் நாட்டின் எல்லா அஞ்சல் / உப அஞ்சல் அலுவலகங்களிலும் இப் பற்றுச்சீட்டுக்களை விநியோகிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்யும்படி தபால்மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**பரீட்சைக் கட்டண விவரங்கள் கீழ்வருமாறு :**

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கட்டணம் ரூபா | 150/- | 200/- | 250/- | 350/- | 400/- |

**செலுத்தப்பட்ட கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு :**

பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு கழராத வண்ணம் உரிய கூட்டில் ஒட்டப்படல் வேண்டும். **(பற்றுச்சீட்டின் இலக்கமும், திகதியும், பரீட்சார்த்தியினால் குறித்து வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதன் நிழற் பிரதியொன்றைக் கைவசம் வைத்திருத்தல் மிகவும் பொருத்தமானது.)**

**செய்முறைப் பரீட்சைக் கட்டணமாக மனைப்பொருளியல், பொறியியற் தொழில்நுட்பவியல், உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களுக்கு ரூபா 300/- வீதம் செலுத்தப்படல் வேண்டும். இக்கட்டணமானது செய்முறைப் பரீட்சைக்கு அழைப்பு வரும்போது மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.**

இல.15 : பரீட்சார்த்தியின் உறுதிக்கூற்று

மிகவும் கவனமாக வாசித்தறிந்த பின்னர் இங்கு பரீட்சார்த்தி கையொப்பத்தை இடுதல் வேண்டும்.

**பார்வை / கேட்டல் / வேறு விசேட தேவைகளுள்ள** விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் சிவப்பு மையினால் **"பார்வை / கேட்டல் / வேறு விசேட தேவையுள்ள விண்ணப்பதாரி"** என எழுதுதல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவத்தை நிராகரித்தல்**

1. இலக்கம் 1 **முதல்** 12 வரையாக உள்ள விடயங்கள் விண்ணப்பப்படிவத்தின் முதற்பக்கத்தில் தரப்பட்டிருத்தல் வேண்டும். **அவ்வாறு தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் அறிவுறுத்தல்களுக்கு அமையாத விண்ணப்பங்களும் குறிப்பிட்ட திகதிக்குப் பிந்திய விண்ணப்பங்களும் பரீட்சைக் கட்டணத்தை முத்திரையாக அல்லது காசுக்கட்டளை மூலமாக அனுப்பும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.**

2. பாடசாலையிலிருந்து விலகியவர்கள் மட்டுமே தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாகக் கருதப்படுவர். பாடசாலையில் கற்றுக்கொண்டு, தனிப்பட்ட விண்ணப்பதாரியாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்ற தடைவிதிக்கப்படுவர்.